மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயம்

<u>அசல் வழக்கு எண்.94/2020</u>

2025ம் ஆண்டு ஜுலை மாதம் 18ம் நாள் வெள்ளிக்கிழமை வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு சட்டத்தின் ஏற்பாட்டின்படி திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கந்தசாமி | தொழில் | |
| த/பெ | | ஊர் | |
| வயது | | தாலூக்கா | காங்கேயம் |
| மதம் | இந்து | மாவட்டம் | திருப்பூர் |

<u>18.07.2025 வா.சா.2 ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. எனக்கு இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை எதுவும் வரவில்லை என்றால் சரிதான். வாதி அழைத்ததன் பெயரில்தான் இந்த வழக்கில் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். பெரியசாமி கவுண்டருக்கும், வாதிக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. கே.சி.சம்பத்குமார் என்பவரை எனக்கு தெரியுமா என்றால் தெரியும் நான் எனது முதல் விசாரணை நிரூபன வாக்குமூலத்தில் வாதியின் தகப்பனார் கே.சி.சம்பத்குமார் என்பவருக்கு 1 ஏக்கர் ஒரு சென்ட் நிலத்தை விற்பனை செய்ததாக நான் சொல்லி உள்ளேன் என்றும், ஆனால் வாதியின் தகப்பனார் மேற்படியாருக்கு ஒரு ஏக்கர் 11 –½ சென்ட் நிலத்தை விற்பனை செய்து உள்ளார் என்றும் சொன்னால் சரியாக சரியல்ல.

2. எனவே தாவா சொத்தான 13-1/2 சென்ட் நிலம் பெரியசாமிக்கு பாத்தியம் இல்லை என்றும் 3 சென்ட் நிலம் மட்டுமே அவருக்கு பாத்தியப்பட்டது என்றும் சொன்னால் சரியல்ல. மேற்படி 3 சென்ட் நிலத்தை 1ம் பிரதிவாதி எந்த வகையிலும் இடைஞ்சல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. நானும், வாதியும் இல்லாத பூமி இருப்பதாக சொல்லி இந்த வழக்கை பொய்யாக தாக்கல் செய்து நடத்தி வருகிறோம் என்று சொன்னால் சரியல்ல.

3. நான் வாதிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் நான் சொன்னது போல் வாதிக்கு பூமிகள் எதுவும் பாத்தியம் இல்லை என்றும் 3 சென்ட் நிலம் மட்டுமே பெரியசாமிக்கு பாத்தியம் என்று சொன்னால் சரியல்ல. வாதிக்கு மேற்படி பூமியில் எந்த பாத்தியமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. வாதி தவறான வழக்கை இந்த பிரதிவாதியின் மீது தாக்கல் செய்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. வாதி தாக்கல் செய்த இந்த வழக்கு தள்ளுபடியாகதக்கது என்று சொன்னால் சரியல்ல. சம்பத்குமார் என்பவரை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்காத காரணத்தினால் இந்த வழக்கு பாதிக்கப்பட்டுள்ளது என்றும் எனவே இந்த வழக்கு தள்ளுபடியாக தக்கது என்றும் சொன்னால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் சரிபார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கைரேகை செய்தும்/கையொப்பம் செய்தும் ஒப்புக்கொள்ளப்படுகிறது.

K S MALATHI
Digitally signed by K S MALATHI
Date: 2025.07.18 18:24:15 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம்